கன்னியாகுமரி மாவட்டப் பள்ளிகள்

இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - நவம்பர் 2013

www.tnschools.co.in

# வகுப்பு 12

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 80

**I. மூன்றனுக்குப் பத்து வரிகளில் விடை எழுதுக:** 3×4=12

1) இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி குறித்துக் கூறப்பட்டன யாவை?

2) தலைவி மேகத்திடம் மொழிந்த தூதுமொழிகள் யாவை?

3) தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

4) பாரதியார் காட்டும் அந்திவான வருணனையைத் தொகுத்து வரைக.

5) சிக்கனத்தால் வரும் பயன்கள் யாவை?

**II. மூன்றனுக்குப் பத்து வரிகளில் விடை தருக:** 3×4=12

6) கவிதையின் நோக்கம் குறித்து ஆசிரியர் சிதம்பரநாதர் கூறுவன யாவை?

7) உவமைகளைக் கையாளும் விதத்திலேயே திருவள்ளுவர் நயமுண்டாகக் குறள் அமைத்திருப்பதை விளக்குக.

8) செல்வம் நிலைபேறு உடையதன்று - என்பதை நாலடி எங்ஙனம் நயம்பட நவில்கிறது?

9) முதல் தடுமாற்றம் என்று மு.வ. குறிப்பது யாது?

10) தேர்தலும் ஒரு தடுமாற்றமே என்று மு.வ. உரைப்பனவற்றை விளக்குக.

**III. ஒன்றனுக்கு இருபது வரிகளில் விடை தருக:** 1×8=8

11) காடு என்னும் தலைப்பின் கீழ்க் கவிஞரேறு வாணிதாசன் உரைப்பனவற்றை எழுதுக.

12) மனித வாழ்வே பெரியது என்னும் அடிப்படையில் மு.வ. உரைக்கும் எதிர்கால கனவு யாது?

**IV. அடிபிறழாமல் எழுதுக:** 4+2=6

13) ''மனிதரெலாம் .........'' எனத் தொடங்கும் பாடலை எழுதி அதன் பாவகையினையும் குறிப்பிடுக.

**V. பொருத்துக:** 4×1=4

| | | |
|---|---|---|
| 14) மதுரைக் கலம்பகம் | - | சுரதா |
| 15) குயில்பாட்டு | - | பாரதிதாசன் |
| 16) அழகின் சிரிப்பு | - | குமரகுருபரர் |
| 17) தேன்மழை | - | பாரதியார் |
| | - | வாணிதாசன் |

**VI.** 18) **இரண்டனுக்கு உறுப்பிலக்கணம் தருக:** 2×2=4

அ) புனைந்தோம் ஆ) புகலீர் இ) நோக்கி ஈ) அழைக்க

19) **மூன்றனுக்கு இலக்கணக்குறிப்பு தருக:** 3×2=6

அ) முதிர்மரம் ஆ) மதிவிளக்கு இ) சோணாடு

ஈ) சட்டதிட்டம் உ) வெண்தயிர் ஊ) இனிதினிது

20) **இரண்டனுக்குப் புணர்ச்சி விதி தருக:** 2×2=4

அ) தமிழிலிலா ஆ) இருட்கடல்

இ) வறுமையுற்று ஈ) விளக்கேற்றி

**VII. ஒன்றனுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக:** 1×10=10

21) ஓர் உல்லாசப் பயணம் - இச்சிறுகதையைக் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி வரைக.

22) ஒவ்வொரு கல்லாய் - இச்சிறுகதையில் வரும் கதைமாந்தர் பற்றித் திறனாய்வு செய்க.

**VIII. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

23) பதினெட்டு உறுப்புகளால் பாடப்படும் சிற்றிலக்கியம்

அ) கலம்பகம் ஆ) உலா இ) பள்ளு

24) முக்கூடற்பள்ளுக்குரிய பாவகை

அ) சிந்துப்பா ஆ) ஆசிரியப்பா இ) வஞ்சிப்பா

25) 'ஆரணம்' என்பதன் பொருள்

அ) வேதம் ஆ) காரணம் இ) காடு

26) இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) நாமக்கல் கவிஞர்

27) வடமொழியில் பாரதம் பாடியவர்

அ) வான்மீகி ஆ) வியாசர் இ) காளிதாசர்

**IX. அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக:** 3×1=3

28) சாரை பாம்பு குருவி கூட்டில் நுழைந்தது.

***(வல்லின மெய்களை இட்டு எழுதுக)***

29) "இளை - இழை" அல்லது "உரை - உறை"

***(பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக)***

30) கழுதை கனைக்க குதிரை உறும சிங்கம் ஊளையிட்டது.

***(மரபுவழூஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக)***

**X. மூன்றனுக்குத் தமிழாக்கம் தருக:** 3×2=6

31) Think everybody alike.

32) Calm before the storm.

33) Prevention is better than cure.

34) To the good people world appears good.

35) Wanted a clerk with three years of experience.

--------